IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO. 246/2008**

Deposition PW2 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 11.09.2023 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு. பிரபுகுமார் | Father's Name : | திரு. மாதையன் |
| Village : | | Taluk : | |
| Caste : | | Calling : | |
| Religion : | | Age : | 38 |
| வா.சா. : | 2 | | |

முதல் விசாரணை :-

1) நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இந்நீதிமன்றத்திலிருந்து சொக்கரசனப்பள்ளி கிராம புல எண். 10/1 ல் உள்ள சொத்திற்குரிய சிட்டா, அடங்கல், UDR அ பதிவேடு மற்றும் சுவாதீன பதிவேடு ஆகியவற்றின் உண்மை நகலை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க கோரியும் வழக்கு பட்டிகை சொத்து குறித்து சாட்சியளிப்பதற்கு வேண்டி அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அதனை பெற்று இவ்வழக்கில் சாட்சி அளிக்க வந்துள்ளேன்.

2) என்னுடைய கைவசத்தில் உள்ள UDR அ பதிவேட்டில் சொக்கரசனப்பள்ளி கிராம புல எண். 10/1 ல் உள்ள சொத்தானது A. முனிவெங்கடப்பா பெயரில் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணமானது 1985 ஆண்டிற்குரியதாகும். என்னுடைய கைவசத்தில் உள்ள UDR அ பதிவேட்டில் சொக்கரசனப்பள்ளி கிராம புல எண். 78/10 ல் உள்ள சொத்தானது கிருஷ்ணப்பா மற்றும் முனிவெங்கடப்பா ஆகியோர் பெயரில் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) வழக்கு பட்டிகை சொத்துக்களுக்குரிய அடங்கலில் புல எண். 10/1 ல் உள்ள சொத்தானது திரு. கு. எல்லப்பா பெயரில் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு பட்டிகை சொத்திற்குரிய அடங்கலில் புல எண். 78/10 ஆனது திரு. நஞ்சப்பா பெயரில் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. 1960 ஆண்டிற்குரிய அ பதிவேட்டில் புல எண். 10/1 ல் உள்ள சொத்தானது

திரு. கு. எல்லப்பா மற்றும் அன்னையா ஆகியோர் பெயரில் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4) 1960 ஆண்டிற்குரிய அ பதிவேட்டில் புல எண். 78 ல் 3 ஏக்கர் 1 செண்ட் விஸ்தீரணம் கொண்ட நிலம் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குரிய TD No.475 திரு. வெங்கட்டராம ரெட்டியார் பெயரில் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) என்னுடைய கைவசத்தில் உள்ள UDR சிட்டாவில் புல எண். 78/10A ல் உள்ள சொத்திற்குரிய பட்டா எண். 152 ஆகும், அது திரு. அன்னையா மகன் கிருஷ்ணப்பா, திரு. எல்லப்பா மகன் திரு. முனிவெங்கடப்பா ஆகியோர் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 8.5 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்ட சொத்துள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி புல எண். 78/10A என்று உட்பிரிவு செய்யப்பட்ட உத்தரவு குறித்த விவரங்கள் வட்டாட்சியல் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களில் தான் குறிப்பிடப்பட்டிருக்கும். என்னுடைய கைவசத்தில் உள்ள UDR சிட்டாவில் புல எண். 10/1 ல் உள்ள சொத்திற்குரிய பட்டா எண். 95 ஆகும், அது திரு. எல்லப்பா மகன் முனிவெங்கடப்பா, எல்லப்பா மகன் திரு. குள்ளப்பா, திரு. திம்மையா மகன் திரு. பாப்பையா ஆகியோர் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் விஸ்தீரணம் 41 ஏர்ஸ் ஆகும்.

6) **(**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் **(**பொது**)** அவர்கள் எனக்கு இவ்வழக்கில் சாட்சியளிப்பதற்கு வேண்டி வழங்கியிருந்த அதிகார கடிதமானது **Ex.X1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

**7 (**மேற்படி வழக்கு பட்டிகை சொத்திற்குரிய **UDR** க்கு முந்தைய அ பதிவேட்டின் உண்மை நகலானது **Ex.X2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

**8 (**வழக்கு பட்டிகை சொத்துக்களுக்குரிய சிட்டாவானது **Ex.X3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

**9 (**வழக்கு பட்டிகை சொத்திற்குரிய அடங்கலின் உண்மை நகல் **Ex.X4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

**10) (**வழக்கு பட்டிகை சொத்துக்களுக்குரிய **UDR** அ பதிவேடின் உண்மை நகலானது **Ex.X5** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது**.**

**1** முதல் **5, 7** முதல் **12, 16** மற்றும் **18** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **:-**

1) புல எண். 10/1 ல் மொத்தம் 41 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்ட நிலம் உள்ளது. மேற்படி சொத்தானது திரு. கு. எல்லப்பா மற்றும் திரு. வெ. அன்னையா ஆகியோர் பெயரில் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செட்டில்மெண்ட் பதிவேட்டில் 60 வருடங்களுக்கு முன்பே மேற்படி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் மேற்குறிப்பிட்டவாறு ஒரு இடத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் பின்னிட்டு திரு. வெ. அன்னையா பெயரில் வழக்கு பட்டிகை சொத்து குறித்து வேறு எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2) புல எண். 10/1 ல் உள்ள சொத்திற்குரிய அடங்கல் ஆவணத்தில் திரு. வெ. அன்னையா பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புல எண். 10/1 ல் உள்ள சொத்திற்குரிய பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் இதர வருவாய் ஆவணங்கள் திரு. அன்னையப்பாவின் தந்தை திரு. வெங்கட்ரமணப்பாவின் பெயரில் வழங்கப்படவில்லை. 24.08.1975 தேதியன்று வழங்கப்பட்ட பட்டா பாஸ்புத்தகத்தில் திரு. வெ. அன்னையா த/பெ. வெங்கட்ரமணப்பா பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.6 ஆவணத்தில் திரு. எல்லப்பாவின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தின் அடிப்படையில் புல எண். 10/1 ல் மொத்தம் ஒரு ஏக்கர் ஒரு செண்ட் விஸ்தீரணம் கொண்ட நிலம் மட்டுமே உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) வழக்கு பட்டிகை சொத்துக்கள் குறித்த வருவாய் ஆவணங்களில் வருவாய் அதிகாரிகள் முறையாக விசாரணை செய்யாமல் தவறான விவரங்களை குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரியல்ல. புல எண். 78 ஆனது திரு. வெங்கட்ராம ரெட்டி பெயரில் உள்ளதாக என்னுடைய கைவசத்தில் உள்ள ஆவணத்தில் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது, மேற்படி புல எண்ணில் மொத்தம் 3 ஏக்கர் 1 செண்ட் விஸ்தீரணம் கொண்ட நிலம் உள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சொத்திற்குரிய TD No.475 ஆகும். மேற்படி சொத்திற்குரிய அடங்கலில் திரு. வெங்கட்ராம ரெட்டி பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1975 ஆண்டிற்குரிய UDR சிட்டாவில் புல எண். 78/10 ல் உள்ள சொத்தானது திரு. சின்னப்பா மகன் திரு. நஞ்சப்பா பெயரில் உள்ளதாகவும், அதில் மொத்தம் 20 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்ட நிலம் உள்ளதாகவும் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) 1975 ஆண்டிற்குரிய சிட்டாவின் அடிப்படையில் புல எண். 78/10 ல் உள்ள சொத்தானது திரு. நஞ்சப்பாவிற்கு பாத்தியப்பட்டதாக தான் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திரு. அன்னையப்பா த/பெ. திரு. வெங்கட்ரமணப்பா பெயரில் புல எண். 78/10 ல் உள்ள சொத்தானது உரிமைப்பட்டதாக விவரம் ஏதும் 1975 ஆண்டு சிட்டாவில் விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புல எண். 78/10 ல் உள்ள சொத்திற்குரிய இனாம் பட்டா எண். 15 ஆகும். ஆகவே

திரு. அன்னையப்பா த/பெ. திரு. வெங்கட்ரமணப்பா பெயரில் புல எண். 78/10 ல் உள்ள சொத்திற்கு தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. UDR அ பதிவேட்டில் புல எண். 10/1 ல் உள்ள சொத்து திரு. அன்னையப்பா த/பெ. வெங்கட்ரமணப்பா பெயரில் உள்ளதாக விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5) மேற்படி UDR அ பதிவேடு 29 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆண்டிலிருந்து தற்போது வரை புல எண். 10/1 ல் உள்ள சொத்து குறித்து திரு. அன்னையப்பா பெயரிலோ அல்லது அவரது மக்கள் பெயரிலோ வருவாய் ஆவணங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வருவாய் ஆவணங்கள் 1960 ஆண்டிற்குரியது என்றாலும், ஆகவே அதன் பின்னிட்டு வழக்கு பட்டிகை சொத்துக்களுக்குரிய வருவாய் ஆவணங்கள் தற்போது யாருடைய பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றோ அல்லது யாருடைய சுவாதீன அனுபவத்தில் உள்ளது என்றோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆகவே 1962 ஆண்டிலிருந்து தற்போது வரை வழக்கு பட்டிகை சொத்துக்களுக்குரிய வருவாய் ஆவணங்கள் திரு. அன்னையப்பா பெயரிலோ அல்லது அவரது வாரிசுகள் பெயரிலோ வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

6) மேலும் 78/10 ல் உள்ள சொத்திலும் திரு. அன்னையப்பாவோ அல்லது அவரது வாரிசுகளோ சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். ஆகவே வழக்கு பட்டிகை சொத்து திரு. அன்னையப்பாவிற்கோ அவரது வாரிசுகளுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

**1** முதல் **5, 7** முதல் **12, 16** மற்றும் **18** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.**

**6, 13** முதல் **15** மற்றும் **17** பிரதிவாதிகள் வரா தரப்பினர் ஆக்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

Digitally signed by V AGAVITHAN

Location: HOSUR